வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் D. கான்சாபுரம் ஊராட்சித்தலைவர் / செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

முன்னிலை க. முருகேஸ்வரி

வீட்டு மனைப்பிரிவு அனுமதி எண் 02 /2024 நாள் 11/ .03.2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் - வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - D. கான்சாபுரம் ஊராட்சி

துரைச்சாமிபுரம் கிராமம் சர்வே எண் 583/1B1 ல் ஏக்கர் 2ல் பரப்பளவு இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு

அங்கீகாரம் ஒப்புதல் வழங்கி – உத்திரவிடல்

பார்வை : 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் - விருதுநகர் அவர்களின் கடிதம GMKQP2PK/VNR 2023TCP Date 13.07.2023

2. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் - விருதுநகர் மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் - LP/DDTCP/VNR No.101/2023(O) நாள் 01.08.2023

உத்தரவு :

1. வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் D. கான்சாபுரம் கிராம ஊராட்சி துரைச்சாமிபுரம் கிராமம் சர்வே எண் 583/1B1 ல் ஏக்கர் 2ல் பரப்பளவு இடத்துக்கு குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப அங்கீகாரம் ஒப்புதல் பார்வை (1) கண்ட கடிதத்தின் படி சில நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

2. சிவகாசி சார்பதிவக ஆவண எண்கள் 7911/2023, 7912/2023 08/08/2023 மூலம் பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

3. பார்வை 1 ல் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்புத் துறையின் முன் அனுமதி பெறப்படும் வீட்டு மனைப்பிரிவுகளுக்கு, கூராய்வு கட்டணம் மனை 1 க்கு ரூபாய் 1000/- வீதம் மொத்தம் 37 மனைகளுக்கு, ரூபாய் 37000/- மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ரசீது எண்: 2023-2024/24/10/15/7/2 . நிலப்பயன்மாற்றக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் 3 சதவீதம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரரின் மொத்த இடத்திற்கான சந்தை மதிப்பில் 3 சதவீதம் மனுதாரரால் செலுத்தப்பட்டு உள்ளது.

4. ஏனவே பார்வை (1) ல் கண்ட கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலின்படியும் இணைத்து வரப்பெற்றுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டு விட்டதாலும் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் D. கான்சாபுரம் ஊராட்சி துரைச்சாமிபுரம் கிராமம் சர்வே எண் 583/1B1 ல் ஏக்கர் 2 பரப்பளவு உள்ள மனைப்பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பொதுப் பயன்பாட்டு இடங்கள் நீங்கலாக மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநரால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின் படி 1 முதல் 37 வரையிலான மனைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

5. பார்வை (1) கண்ட கடிதத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் முழுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இணைப்பு :

வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

D. கான்சாபுரம் ஊராட்சி

தலைவர்
ஊராட்சி மன்றம்
D கான்சாபுரம்

பெறுநர் :

K. தாயார்

K. பிருந்தா

2/653B, கே எஸ் எ ராஜதுரைநகர்

சிவகாசி.